# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டப முன்றல் மதில் திருத்தமும் வரவேற்பு வளைவு அமைத்தலும்

## - A/L 91 மாணவர்களின் முயற்சி –

பல்லாயிரக்கணக்கானவர்கள் உலகமெங்கும் புகழ்பரப்பி சிறக்க உதவிய யாழ் இந்து அன்னையின் அன்பிற்குரிய பழைய மாணவர்களே!

எமது கல்லுரியின் பழையமாணவர் சங்கத்தாய்க்கிளையின் நூறாண்டு நிறைவை முன்னிட்டு கல்லுரி குமாரசுவாமி மண்டப நுழைவாயிலில் மதிலுடன் கூடிய வரவேற்பு வளைவினை அமைத்துத்தர க.பொ.த உயர்தர 1991 பிரிவு மாணவர்கள் முன்வந்துள்ளனர். கீழைத்தேய கலைநுட்பங்களுடன் அமைக்கப்படவுள்ள இவ்வரவேற்பு வளைவை பூர்த்தி செய்ய ஏறத்தாள ரூபா 500,000(ஐந்நுறாயிரம்) வரையில் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. A/L 91 மாணவர்களின் பூரண நிதிவழங்கலுடன் நடைபெற இருக்கும் இப்பணிக்கு மேற்படி பிரிவு மாணவர்களிடம் இருந்து போதுமான ஆதரவை இங்குள்ள மாணவர் தரப்பு கோருகின்றது.மேற்படி அணியைச்சேர்ந்த மாணவர்கள் எங்கிருந்தாலும் தங்களால் இயன்ற அன்பளிப்புக்களை யாழ் இந்துக்கல்லுரியின் இலங்கை வங்கிக்கிளை கணக்குக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.அத்துடன் அன்பளிப்பு வழங்கும் நண்பர்கள் தங்களது முழுப்பெயர் தற்போதய தபால் முகவரி,தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களுடன் தாங்கள் அனுப்பிய தொகைக்கான வங்கிப்பிரதியில் “யாழ் இந்து வரவேற்பு வளைவு” எனக்குறிப்பிட்டு பொருளாளர் பழையமாணவர் சங்கம் யாழ் இந்துக்கல்லுரி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது கல்லுரியின் 0094212222431 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

நிதிதொடர்பான சகல விடயங்களும் கல்லுரி அதிபர் மற்றும் யாழ் இந்துக்கல்லுரி பழையமாணவர்சங்க பொருளளாளர் ஆகியோரால் மட்டுமே மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இதுவிடயமாக மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள விரும்புபவர்கள் பழையமாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினரும் மேற்படி மாணவர் அணியினைச்சேர்ந்தவருமான டாக்டர் தீனதயாளன் அவர்களை 0094773164760 என்ற தொலைபேசி இலக்கத்தினுாடாக தொடர்பு கொள்ளவும்.

கட்டுமானப்பணிக்கான உத்தேச மாதிரி வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.
குறிப்பு: இதில் சிறு மாற்றங்கள் செய்யப்பட இருக்கிறது.

வங்கி விபரம்

கணக்கு இல: 0001095228

Principal, JHC OBA
Bank of Ceylon(2nd Branch)
Stanly Road,Jaffna,Srilanka

நன்றி!

-பழைய மாணவர்கள் A/L 91 அணியினர்,யாழ்ப்பாணம்-
-16.02.2006-